# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:132 ★12.09.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:132 ★12.09.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai


## தேனி மாவட்டம் தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் , தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் ம.கோவிந்தராவ் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி மாவட்டம் தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தேனி மாவட்டம், கம்பம்அரசுமருத்துவமனை, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் இன்று (11.09.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்தராவ், இ.ஆ.ப. அவர்கள், தமிழ்நாடு அரசின் புதிய திட்டமான தாய்மாமன் தங்க மோதிரம் திட்டதிற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்கள் கம்பம் அரசு மருத்துவமனையின் மகப்பேறு சிகிச்சைப்பிரிவுக்கு நேரில் சென்று, சிகிச்சைக்கு வரும் கர்ப்பிணிப் தாய்மார்களின் சுய விபரங்கள் PICME இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டு, அதில் ஒரு முகவரியில் கண்ட தொலைபேசி எண்ணைத்தொடர்புகொண்டு கர்ப்பிணி பெண்ணிடம் அவருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்ததுடன், மருத்துவமனைக்கு நாள்தோறும் பரிசோதனைக்காக வருகின்ற கர்ப்பிணிப் பெண்களிடம் அவர்களின் ஆதார் மற்றும் கைப்பேசி எண்களை இத்திட்டத்தில் பயன்பெறும் வகையில் தவறாமல் பதிவு செய்ய வேண்டும் என பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, மருத்துவமனை வளாகத்தில் தாய்மாமன்தங்கமோதிரம் வைக்கப்படவுள்ள தங்கமோதிரம்பாதுகாப்பு அறைகளின் உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளை பார்வையிட்டு, பாதுகாப்பு அறை முழுகண்காணிப்பில் இருக்கும் வகையில் பணியாளர்களை நியமித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதுடன், இத்திட்டம் துவக்கப்படுவது முதல் அரசு வழிகாட்டுதலின்படி, பிரசவித்த தாய்மார்கள் மருத்துவமனையை விட்டு (Dis charge) செல்லும்போது பச்சிளம் குழந்தைகளுக்கு ஒருகிராம் தங்கமோதிரம் அணிவித்து வழியனுப்பி வைக்கப்பட வேண்டும். அந்தவகையில் இப்பணிகளை திட்டமிட்டு சரியான முறையில் செயல்படுத்த வேண்டும் என மருத்துவர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர், காமயக்கவுண்டன்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள தாய் சேய்நலப் பகுதிக்கு நேரில் சென்று கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு, அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்ததுடன், பொதுமக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சைவழங்கிட வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு வரும் பதிவேற்றம் உள்ள மகப்பேறு சிகிச்சைப்பிரிவில் ஆய்வு மேற்கொண்டு, கர்ப்பிணிப் தாய்மார்களின் சுயவிபரங்கள் PICME இணையதளத்தில் செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டு, மருத்துவமனை வளாகத்தில் தாய்மாமன் தங்கமோதிரம் வைக்கப்படவுள்ள தங்கமோதிரம்பாதுகாப்பு அறைகளின் உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளை கேட்டறிந்ததுடன், இத்திட்டதினை சிறந்த முறையில் செயல்படுத்திட அறிவுறுத்தினார்.

மேலும் தெரிவிக்கையில், தேனி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின் கீழ், தங்க மோதிரங்கள் வழங்கும் வகையில் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பெரியகுளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் கம்பம் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, அங்கிருந்து மாவட்டத்தின் பிற அரசு மருத்துவமனைகள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எடுத்துச்சென்று, அங்கு பிரசவிக்கும் தாய்மார்களுக்கு வழங்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின்கீழ் பயன்பெறவுள்ள கர்ப்பிணிப் தார்மார்களின் விபரங்களை மருத்துவர்களின் ஆலோசனைப்படி பதிவு செய்திட வேண்டும். ஒவ்வொருநாளும்தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின்கீழ், தங்கமோதிரம் வழங்கும் போது தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான வசதிகளைவழங்கி காலத்தாமதமின்றி தங்கமோதிரங்களை வழங்கி அவர்களை பாதுகாப்பாக வீட்டிற்கு வழியனுப்பி வைக்க வேண்டும் என மருத்துவர்களுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.தேவ்லேந்து, இ.ஆ.ப.. திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி) திரு. துஷார் ஸ்ரீஹர் ஷிண்டே, இ.வ.ப., தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ரோகினி தேவி, மாவட்ட சுகாதார அலுவலர் திரு. வரதராஜன், கம்பம் அரசு மருத்துவமனைதலைமை மருத்துவ அலுவலர் திருமதி பானுமதி, உத்தமபாளையம் வட்டாட்சியர் திரு.பாலசண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே வங்கி பணியை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னையில் வங்கி ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கிராமசபை தீர்மானங்களை அறிந்துகொள்ள செயலி

## ஊரக வளர்ச்சித்துறை சார்பில் விரைவில் அறிமுகம்

கிராமசபை கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் உள்ளிட்ட செயல்பாடுகளை அறிந்துகொள்ள புதிய செயலியை ஊரக வளர்ச்சித் துறை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் 12,571 கிராம ஊராட்சிகள் உள்ளன. ஊராட்சிகளின் கணக்கு வழக்குகள், முக்கிய தேவைகள் குறித்து ஆலோசனை செய்து தீர்மானம் நிறைவேற்ற ஆண்டுதோறும் 6 முறை கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கூட்டம் ஊராட்சித் தலைவரால் கூட்டப்படும். அப்போது, கிராமத்தின் தேவைகள் மற்றும் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்த திட்ட அறிக்கையை,



அரசு அதிகாரி முன்னிலையில் பொதுமக்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அதேபோல், ஊராட்சி மன்ற நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்றத்துக்கு இணையான அதிகாரம், கிராம சபைக் கூட்டங்களுக்கு உள்ளது. இந்நிலையில் கிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் உள்ளிட்ட தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக கிராம சபை செயலியை ஊரக வளர்ச்சித்துறை உருவாக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறும்போது, "கிராம சபை நடவடிக்கைகளை இளைஞர்கள் உள்பட அனைத்து தரப்பினரும் அறிந்து கொண்டால் உள்ளாட்சி நிர்வாகத்தில் முறை கேடுகள் நடைபெறுவதைத் தடுக்க முடியும். இதற்காக கிராமசபையின் நிகழ்ச்சி நிரல், நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் உள்ளிட்ட தகவல்களை கிராம மக்கள் அறியும் விதமாக, புதிய செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயலி விரைவில் செயல்பாட்டுக்கு வரும். அக் .2ம் தேதி நடைபெறவுள்ள கிராமசபைக்கூட்டத்தில் இதுபற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மேலும், இந்த செயலி மூலமாக வருங்காலத்தில் ஊராட்சி அமைப்புகளில் நடைபெறும் ஒப்பந்தங்கள், திட்டப்பணிகள் உள்பட பல் வேறு தகவல்களை அறிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்படும்" என்றனர்.

# 69வது நினைவு தினத்தையொட்டி பரமக்குடியில் இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் தலைவர்கள் மரியாதை

தியாகி இமானுவேல் சேகரனின் 69வது நினைவு தினத்தையொட்டி ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள அவரது நினைவிடத்தில் அரசியல் தலைவர்கள் மரியாதை செலுத்தினர். இதையொட்டி 8 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தியாகி இமானுவேல் சேகரனின்நினைவுதினத்தையொட்டி அங்கு பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நினைவிடத்தில் முதலில் இமானுவேல் சேகரனின் சொந்த ஊரான செல்லூர் கிராம மக்கள்சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் இமானுவேல் சேகரன் குடும்பத்தினரான அவரது மகள் சுந்தரி பிரபாராணி, பேரன்கள் சக்கரவர்த்தி, ஆரோக்கிய கோமன், ஜீவன் ஆகியோர் மரியாதை செலுத்தினர். அதைத்தொடர்ந்து தேவேந்திர பண்பாட்டுக் கழகம்சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

தவெக சார்பில் அமைச்சர் நிர்மல்குமார் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் கோ.கா.அருண் ராஜ், டி.கே. பிரபு, மதன்ராஜா, ராஜீவ், எம்எல்ஏக்கள் சபரி ஐங்கரன் (பெரியகுளம்), இளங்கோவன் (மானாமதுரை), கார்த்திக் (ஸ்ரீவில்லிபுத்தூர்), அய்யனார் (நிலக்கோட்டை), கார்த்திகேயன் (மதுரை கிழக்கு), கோபிசன் (மதுரை தெற்கு), கருப்பையா (சோழவந்தான்) உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



இதேபோல் திமுக சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். முன்னாள் அமைச்சர்கள் பெரியகருப்பன், ராஜகண்ணப்பன், எம்எல்ஏக்கள் காதர்பாட்சா, பொன்முத்துராமலிங்கம், கதிரவன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், மணிகண்டன் , ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் முனியசாமி உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர். மேலும், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், நடிகை கஸ்தூரி, முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை, சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேஷ்குமார், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், தேமுதிக நகரச் செயலாளர் அன்பு தட்சிணாமூர்த்தி, விசிக சார்பில் சமூக நீதித் துறை அமைச்சர் வன்னியரசு, புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி, மதிமுக சார்பில் சதன் திருமலைக்குமார், பாமக பொதுச் செயலாளர் வடிவேல் ராவணன், வீத லீடர்ஸ் அமைப்பின் சார்பில் தரணி முருகேசன், எஸ்டிபிஐ கட்சியின் சார்பாக மாநில தலைவர் நெல்லை முபாரக் உள்ளிட்டோரும் மரியாதை செலுத்தினர்.

ராமநாதபுரம் மாவட்ட எஸ்பி சந்தீஷ் தலைமையில் 8 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். விதிமீறல்களை தடுக்க ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும்38சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

பரமக்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 700 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு பரமகுடி நகர் காவல் நிலைய கட்டுப்பாட்டு அறையில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.

# இந்திய குடியுரிமை அட்டை வழங்கக் கோரி வழக்கு: மத்திய, மாநில அரசு பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு

இந்தியர்களுக்கு குடியுரிமை அட்டை வழங்கக் கோரிய வழக்கில் மத்திய அரசு பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நெல்லையைச் சேர்ந்த முத்துராமன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: பல்வேறு நாடுகளிலும் குடிமக்களுக்கு குடியுரிமை அட்டைகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவிலும் ஒவ்வொரு குடி மகன்களுக்கும் தனி அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். இந்தியர்களுக்கு தனியான குடியுரிமை அட்டை இல்லாததால்அவர்கள்வெளிநாடுகளுக்கு செல்லும் போது பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றனர்.




ஆதார்தகவலின்அடிப்படையில் குடியுரிமைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு கோரப்பட்டிருந்தது. மனுவை நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வு விசாரித்து, மனு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நவ. 5க்கு தள்ளிவைத்தது.

# செங்குன்றத்தில் கூட்டுறவு சங்க வளாகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் ஆய்வு

செங்குன்றம், செப்டம்பர் 12:
இந்திய வரலாற்றில் முதல்முறையாக பயிர்க்கடன்தள்ளுபடி அறிவித்து 60 நாட்களிலேயே விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. செங்குன்றத்தில் ஆய்வு மேற்கொண்ட கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் பேட்டியளித்துள்ளார்.

செங்குன்றத்தில்இயங்கிவரும்சைதாப் பேட்டைதாலுக்கா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் ஆய்வு மேற்கொண்டார்.

கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட விவசாய விளை பொருட்களை சேமித்து வைக்கும் சேமிப்புக் கிடங்கு, விவசாயம் விலை பொருள் ஏல மையம், மருதம் கூட்டுறவு அங்காடி, எண்ணெய் அரவை சங்கங்களின் பதிவாளர் லதா, காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனர் மற்றும் கூடுதல் பதிவாளர் செல்வம் மலர், திருவள்ளூர் மண்டல இணைப்பதிவாளர் ஜெயஸ்ரீ, பொன்னேரி சரக துணைப் பதிவாளர் சிவப்பிரகாஷ், கூட்டுறவுச் சங்க இயக்குனர் பிரபு, பொது மேலாளர் நீதி ராஜன், மேலாளர் தணிகாசலம் மற்றும் கூட்டுறவு சங்க அலுவலர்கள் பணியாளர்கள், தவெக செங்குன்றம் நகரச் செயலாளர் கே.விஜி, இணைச் செயலாளர் வினோத், பொருளாளர் சுரேஷ், நிர்வாகிகள் ஆர்.முனுசாமி, பிரவீன், ஜி.பிரபு, அன்சாரி, ஆசைத்தம்பி, கேடி எஸ் காசி விஸ்வநாதன், காதர், அனிதா, சோழவரம் ஒன்றியச் செயலாளர் செல்வக்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உள்ளனர்.





ஆலை, கூட்டுறவு மருந்தகம். அரசு இ சேவை மையம், கூட்டுறவு வேளாண்மை பட்டய பயிற்சி நிலையம், ஆவின் பாலகம், சூப்பர் மார்க்கெட் ஆகியவற்றில் ஆய்வு செய்து, செயல்பாடுகள் மற்றும் இருப்பு விவரங்கள் குறித்து அதிகாரிகளிடம் அமைச்சர் காந்திராஜ் கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது சூப்பர் மார்க்கெட்டில்கூட்டுறவுசங்கம்சார்பில்விற்கப்படும் பொருள்களின் தரம், காலாவதி தேதி உள்ளிட்டவைகளை பலவற்றை ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார். அதோடு பட்டய பயிற்சி நிலையத்தில் பயில்வோரிடம் பேன், கழிப்பறை வசதி உள்ளிட்டவைகளை குறித்து கேட்டறிந்து குறைகளைநிறைவுசெய்துதருவதாகவாக்குறுதி அளித்தார். இந்த ஆய்வின் போது மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளருமானஎம்.எல். விஜய்பிரபு, கூட்டுறவு

செக்கு எண்ணெய் அரவை ஆலையில் அமைச்சர் ஆய்வு செய்ய நுழைந்த போது மின்தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து கேமராவில் பொருத்தி இருந்த விளக்கு வெளிச்சத்தில் அமைச்சர் காந்திராஜ் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சரிடம், அரசு அறிவித்துள்ள பயிர் கடன் தள்ளுபடி தொகையை செலுத்துமாறு கூட்டுறவு சங்கங்கள் நெருக்கடி தருவது குறித்த கேள்விக்கு, நெருக்கடி யாரும் தருவதில்லை, புரிதல் இருக்காது எனவும், இந்திய வரலாற்றில் முதல்முறையாக தள்ளுபடி அறிவித்து 60 நாட்களிலேயே விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும், யாரும் நெருக்கடி தருவதாக எந்த தகவலும் வரவில்லை என்றும் புகார் குறித்து துறை சார்ந்து விசாரித்து நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளதாக கூறினார்.

# பெரிய மாத்தூர் காமராஜர் சாலையில் மழைநீர் தேங்கியதால் பொதுமக்கள் அவதி



செங்குன்றம், செப்டம்பர் 12:
மாதவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெரிய மாத்தூர் பகுதி காமராஜர் சாலையில் அண்மையில் பெய்த மழையால் இச்சாலையில் மழைநீர் தேங்கி நின்றது. இதனால் அவ்வழியாக பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், ருத்துவமனை, வேலைக்குச் செல்லக் கூடிய பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் இப்பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக கழிவுநீர் கால்வாய் பணி கட்டி முடிக்காமல் கிடப்பில் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் உடனடியாக நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பாதிக்கப்பட்டு வரும் வாகனஓட்டிகள், மாணவர்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



பழனியில், தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, பழனி வ உ சி பேருந்து நிலையத்தில், அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர். இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக மாவட்டத் தலைவர் கார்த்திக்ராஜன், நகர நிர்வாகி மீதுன், மற்றும் ஜே பி எஸ் சஞ்சய் உட்பட நிர்வாகிகள் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



## பழனி ஆவினன்குடி அருகே

# நுழைவு கட்டண வசூலில் வாக்குவாதம்; பக்தர்கள் அதிர்ச்சி

பழனி,செப்.12
பழனி திரு ஆவினன் குடி கோயில் அருகே வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிப்பதாக கூறிய நபரிடம், வெளியூரைச் சேர்ந்த பக்தர் ஒருவர் சரமாரியாக கேள்வி எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது. சம்பவம் குறித்து தெரியவருவதாவது, வெளியூரில் இருந்து பழனிக்கு சாமி தரிசனத்திற்காக வந்த பக்தர் ஒருவரிடம், அப்பகுதியில் நின்று கொண்டிருந்த ஒருவர் நுழைவு கட்டணம் செலுத்த வேண்டும் என கூறியுள்ளார். அதற்கு அந்த பக்தர், "நான் எதற்காக இங்கே நுழைவு கட்டணம் கட்ட வேண்டும்? நான் அரசுக்கு முறையாக ரோடு டேக்ஸ் கட்டியிருக்கிறேன், இன்சூரன்ஸ் வைத்திருக்கிறேன். அப்படியே கட்டணம் கட்ட வேண்டும் என்றால், அரசாங்கம் கொடுத்துள்ள ஜி.ஓ (G.O) வை காட்டு. உனக்குயார்இங்கேவசூல் செய்ய அதிகாரம் கொடுத்தது?" என சரமாரியாக கேள்வி எழுப்பி வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பக்தரின் இந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாத சுங்கவரி ஊழியர், கடைசியில் "நீ பணம் எதுவும் கட்ட வேண்டாம், இந்த இடத்தை விட்டு சென்றால் போதும்" என கூறி அனுப்பியதாக கூறப்படுகிறது.

# விவசாயிகளின் குறைகள் தீர்க்க ஆட்சியர் தலைமையில் கூட்டம் செப்.18ல் நடைபெறும் விவசாயிகள் குறை தீர்வு நாள்

திருவண்ணாமலை, செப்.12
திருவண்ணாமலை மாவட்டத்தில் செப்டம்பர் மாதத்திற்கான விவசாயிகள்குறைதீர்வுநாள்கூட்டம் வரும் 18.09.2026 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க்தலைமையில் நேரடியாக நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று, தங்களது பொதுவான கோரிக்கைகள் மற்றும் தனிநபர் குறைகள் குறித்து தெரிவிக்கலாம்.

விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு உடனடியாக பதிலளிக்கும் வகையில், வேளாண்மைத்துறை மட்டுமின்றி தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகத் துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை, வங்கிகள் உள்ளிட்ட வேளாண்மை சார்ந்த பல்வேறு துறைகளின் அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.



விவசாயிகள் தங்களது பொதுக்கோரிக்கைகளை கூட்டத்தில் நேரடியாகத் தெரிவித்தும், தனிநபர் குறைகள் தொடர்பான மனுக்களை அளித்தும் பயன்பெறலாம். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் திரளாக கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகள் மற்றும் குறைகளைத் தெரிவித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.



**திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டுவில் ஓடும் பேருந்தில் பணத்தை கொள்ளையடித்த பிரபல திருடி கைது.**
**6500 ரூபாய் பணம் பறிமுதல்.**

## சென்னை, புதுச்சேரி செல்ல வேண்டிய நிலைக்கு முற்றுப்புள்ளி:

# திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரியில் 3 மாதங்களில் 100 ஆஞ்சியோ பரிசோதனைகள்

## கேத் லேப் மூலம் இதய நோயாளிகளுக்கு அதிநவீன சிகிச்சை

திருவண்ணாமலை, செப்.12
திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நவீன கேத் லேப் செயல்பாட்டுக்கு வந்ததையடுத்து, கடந்த 3 மாதங்களில் மட்டும் 100 ஆஞ்சியோ பரிசோதனைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் திருவண்ணாமலை மற்றும்சுற்றுவட்டாரமாவட்டங்களைச் சேர்ந்த இதய ஊடுருவல் தொடர்பான பல்வேறு உயர்தர சிகிச்சைகளை இங்கேயே வழங்க முடிகிறது.

ஆஞ்சியோகிராம், ஆஞ்சியோபிளாஸ்டி, பேஸ்மேக்கர் பொருத்துதல் உள்ளிட்ட நவீன இதய சிகிச்சைகள் முதலமை ச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதமரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் தகுதியுள்ள நோயாளிகளுக்கு இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரைக்கும் 'த்ரோம்போலைசிஸ்'அவசரசிகிச்சை வழங்கப்படுகிறது.

இந்நிலையில், கேத் லேப் வசதி தொடங்கப்பட்டு மூன்று மாதங்களிலேயே 100 ஆஞ்சியோ பரிசோதனைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருப்பது, இந்த மருத்துவ வசதியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

இதய நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் பரிசோதனை மற்றும் சிகிச்சை கிடைப்பது மிகவும் அவசியமானது. குறிப்பாக மாரடைப்பு போன்ற அவசரநிலைகளில் ஒவ்வொரு நிமிடமும் முக்கியமான தாகும். அந்த வகையில், திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன கேத் லேப் செயல்படுவது மாவட்ட மக்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.




நோயாளிகள் உயர்தர சிகிச்சைக்காக சென்னை அல்லதுபுதுச்சேரிசெல்ல வேண்டிய நிலை பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய நாள ஊடுருவல் சிகிச்சைகளுக்காக நவீன கேத் லேப் அமைக்க அரசு ரூ.7 கோடி நிதி ஒதுக்கியது. கடந்த ஜூன் மாத இறுதியில் இந்த வசதி மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

அதன்பிறகு இதய நோய்களுக்கான முக்கியமான பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் மருத்துவமனையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் எட்வீனா வசந்தா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீனகேத் லேப் தொடங்கப்பட்டிருப்பது மாவட்ட மக்களுக்கு மிகப்பெரிய மருத்துவ முன்னேற்றமாகும். இதன் மூலம் இதய நாள ரத்த நாள அடைப்பை

முன்பு இதுபோன்ற சிகிச்சைகளுக்காக திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்கள் சென்னை, புதுச்சேரி உள்ளிட்ட நகரங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது. இதனால் பயணச் செலவு, சிகிச்சைக்கான கூடுதல் செலவு மற்றும் அவசர நேரத்தில் ஏற்படும் கால தாமதம் உள்ளிட்ட பல்வேறு சிரமங்களை நோயாளிகள் சந்தித்து வந்தனர்.தற்போது அந்த நிலை மாறியுள்ளது. மருத்துவமனையிலேயே நவீன கேத் லேப் செயல்பட்டு வருவதால், அவசரஇதயசிகிச்சைகள் தேவையான நோயாளிகளுக்கு உடனடியாக மருத்துவ உதவி கிடைக்கும் சூழல் உருவாகியுள்ளது. ஒவ்வொரு மாதமும் சுமார் 60 முதல் 70 மாரடைப்பு நோயாளிகள் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்க ப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் கடுமையான மாரடைப்பால் பாதிக்கப்படும் சுமார் 40 முதல் 50 நோயாளிகளுக்கு, இதயத்தில் ஏற்பட்டுள்ள

திருவண்ணா மலை மட்டுமின்றி, சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மக்களும் இந்த மருத்துவ வசதியை பயன்படுத்திக் கொள்ள முடியும். இதன் மூலம் அரசு மருத்துவமனையில் உயர்தர இதய சிகிச்சை கிடைக்காது என்ற பொதுமக்களின் பழைய நிலைப்பாட்டையும் இந்த வசதி மாற்றி வருகிறது என்றார். பேட்டியின்போது மருத்துவமனை மருத்துவக் கண்காணிப்பாளர் மருத்துவர் மாலதி, ஆர்.எம்.ஓ. டாக்டர் கதிர், இருதயப் பிரிவு மருத்துவர்கள் கண்ணன், ராஜேஸ்குமார், கார்த்திகேயன் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

## செங்கோட்டையில் போதைப் பொருள் விற்பனைக்கு போலீஸ் செக்:

# கஞ்சா, 254 போதை சாக்லேட்டுகளுடன் 2 பேர் கைது

## ரூ.85 ஆயிரம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல்

செங்கோட்டை, செப். 112
தென்காசி மாவட்டம், செங்கோட்டை காவல் நிலைய எல்லைக் குட்பட்ட காலாங்கரை பகுதியில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த இருவரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை செய்தனர்.




சோதனையில் அவர்களிடம் கஞ்சா மற்றும் போதை சாக்லேட்டுகள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து செங்கோட்டை காவல் ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார்.

விசாரணையில், செங்கோட்டை பெருமாள் கோவில் தெருவைச் சேர்ந்த திருமலை என்பவரின் மகன் சிவசுப்பிரமணியன் (30), முத்துசாமி தெருவைச் சேர்ந்த பேச்சிநாதன் என்பவரின் மகன் பாஸ்கரன் (46) ஆகியோர் கஞ்சா மற்றும் போதை சாக்லேட்டுகள் விற்பனையில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதையடுத்து இருவரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து ரூ.85 ஆயிரம் மதிப்பிலான 1 கிலோ கஞ்சா, 254 போதை சாக்லேட்டுகள் மற்றும் ஒரு இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# திமிரி VRTS Allied Health Science கல்லூரி பட்டமளிப்பு விழா

திமிரி VRTS Institute of Allied Health Science கல்லூரியின் பட்டமளிப்பு விழா வெள்ளிக்கிழமை (11.09.2026) திமிரியில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி தாளாளர் தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு S.M. சுகுமார்MLA அவர்கள்கலந்து கொண்டு, மாணவ–மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்வில் தொழிலாளி T.S.கந்தசாமி, சொரையூர் M.குமார், பாளையம் தட்சணாமூர்த்தி, உலகநாதன், M.D.பாஸ்கர், பேரூராட்சி கவுன்சிலர்கள் மணி, அன்பழகன், பல்வேறு இயக்கங்களின் நிர்வாகிகள் விஜய், விக்ரமன், சரவணன், கேசவன், சமூக ஆர்வலர் தங்கராஜ், தலைமை ஆசிரியர் சிவசங்கர், நாராயணமூர்த்தி, ஆசிநாதன், கணியனூர் விநாயகம், ஸ்ரீதர், ஆர்.செல்வராஜ், C.கண்ணன், மல்லி (எ) ஆறுமுகம், கன்னியப்பன், மனோகரன், S. அஜித்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.பட்டம் பெற்ற மாணவ – மாணவிகளுக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.






சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு செயலாளர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் M.மரியம் பல்லவி பல்தேவ், இ.ஆ.ப. இராணிப்பேட்டை நகராட்சி, கிருஷ்ணகிரி டிரங்க் சாலையில்அம்ரூத்2.0திட்டத்தின்கீழ்ரூ.33.09கோடிமதிப்பீட்டில்நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர் ராஜி, நகராட்சி ஆணையாளர் செந்தில் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

# தேனி மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் முன்னோட்டம்

## கடமலைக்குண்டு பள்ளியில் உதவி இயக்குநர் பங்கேற்பு



தேனி,செப்.12

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. வரும் செப்டம்பர் 17, 2026 அன்று இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ள நிலையில், இதன் முன்னோட்ட நடவடிக்கையாக (செப்டம்பர் 11, 2026) தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும்காலைஉணவு சமைத்து மாணவ,மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, கடமலைக்குண்டு கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உம்முல் ஜாமியா அவர்கள் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுடன் அமர்ந்து காலை உணவை அருந்தினார். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி செயலர் சின்னச்சாமி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சாந்தி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பலர் கலந்துகொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பையூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகையில் உள்ள புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



# மூன்றாம் பிறை சிறப்பு "திருவாசக முற்றோதல் மற்றும்' சிவ அடியார்க்கும் அடியார் திருக்கூட்டம்

மூன்றாம் பிறை சிறப்பு "திருவாசக முற்றோதல் மற்றும்' சிவ அடியார்க்கும் அடியார் திருக்கூட்டம் இடம் :ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் வட்டம், வாலாஜா ஒழுகூர் காசி மாநகர், "இயற்கையே இறைவன்" ஸ்ரீ ஆதிகாசி சித்தர் பீடம்

ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயில் உலக மக்கள் அனைவரின் நன்னுக்காக, ஆவணி மாதம் 26ஆம் தேதி 12.09.2026 சனிக்கிழமை, காலை 08.00 மணி முதல்மாலை05.00 மணி வரை, மூன்றாம் பிறை நாளை முன்னிட்டு, திருவாசக முற்றோதல் மற்றும் சிவ அடியார்க்கும் அடியார் திருக்கூட்டம் ஆகிய ஆன்மிக நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற உள்ளன. எனவே, ஆன்மிக அடியார்களும், இறை அன்பர்களும் இச்சிறப்பு வாய்ந்த ஆன்மிக நிகழ்வில் கலந்து கொண்டு, அருள்மிகு ஸ்ரீ காசி விசுவநாதர் பெருமானின் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

## தூத்துக்குடி புறநகர் மாவட்டம் கருங்குளம் வடக்கு ஒன்றியத்தில்

# தவெக கட்சியின் 100 நாள் நல்லாட்சி சாதனைகளை மக்கள் மத்தியில் எடுத்துரைப்பது குறித்து ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன் தலைமையில் ஆலோசனை கூட்டம்

தூத்துக்குடி ,செப்12.

தூத்துக்குடி புறநகர் மாவட்டம் கருங்குளம் வடக்கு ஒன்றியத்தில் தவெக கட்சியின் 100. நாள் நல்லாட்சி சாதனைகளை மக்கள் மத்தியில் எடுத்துரைப்பது குறித்து ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது





தமிழக வெற்றி கழக தலைவரும் தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் ஆணைக்கேற்ப தூத்துக்குடி புறநகர் மாவட்டம் சார்பில் தவெக கட்சியின் முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான தவெக நல்லாட்சியின் 100.நாள் சாதனைகளைமக்கள்மத்தியில் எடுத்துரைப்பதுடன் புறநகர் மாவட்ட செயலாளரும் தமிழக சிறுகுறு தொழில்துறை அமைச்சருமான மதன் ராஜா தலைமையில் கருங்குளம் வடக்கு ஒன்றியத்தில் நலத்திட்டங்கள் வழங்குவது குறித்து கருங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் முத்து கிரு ஷ்ணன் தலைமையில் நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

இந்த ஆலோசனை கூட்டத்தில் கருங்குளம் வடக்கு ஒன்றிய தவெக இணை செயலாளர் மாரியப்பன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமானதவெகவினர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்

**இறப்புக்கு முன் ரத்த தானம்**
**இறப்புக்கு பின் கண் தானம்**

## பழனியில் திராவிடர் கழகம் சார்பில்

# நாட்டின் பெரும்பான்மையான மக்களான பிற்படுத்தப்பட்டோர்(OBC) மக்களுக்கு ஒன்றிய பாஜக அரசு ஜாதிவாரி கணக்கெடுப்பில் குளறுபடிகள்

## ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

பழனி வட்டாட்சியர் அலுவலகம்எதிரேமாலை 5 மணி அளவில் பழனியில் திராவிடர் கழகம் சார்பில் நாட்டின் பெரும்பான்மையான மக்களான பிற்படுத்தப்பட்டோர்(OBC) மக்களுக்கு ஒன்றிய பாஜக அரசு ஜாதிவாரி கணக்கெடுப்பில் குளறுபடிகள் செய்து அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சமூக நீதியை குழி தோண்டி புதைக்கும் வேலையைச் செய்யும் ஒன்றிய அரசை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகம் தமிழ்ப் புலிகள் கட்சி, இந்திய குடியரசு கட்சி, ஆதித்தமிழர் சமூக நீதிப் பேரவை, திராவிட இயக்கத் தமிழர் பேரவை உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர் தமிழ்ப்புலிகள்கட்சியின் சார்பில் தமிழ்ப்புலிகள் கட்சியின் பொறுப்பாளர் பெரியார் கிருஷ்ணன் கண்டன உரை நிகழ்த்தினார் நிகழ்வில் தமிழ்ப்புலிகள் கட்சியின் சார்பில் கரு.இரணியன் மாவட்டச் செயலாளர், தர்மராஜ் திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதி செயலாளர், சிவமணி மாவட்ட துணை செயலாளர் பெரியார் கிருஷ்ணன் ஒன்றிய செயலாளர், பிரஸ் மாரிமுத்து கொள்கை பரப்பு செயலாளர் மற்றும் தோழமை இயக்க தோழர்கள் கலந்து கொண்டனர்.






திண்டுக்கல் மாவட்டத்துக்கு தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பா வெங்கட்ராமன் திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை புரிந்துள்ளார் அவரே வரவேற்கும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் துர்கா தேவி கொடரோடு பயணியர் விடுதியில் மலர் கொத்து வழங்கி வரவேற்றார்

# சின்னமனூர் நகராட்சியில் கழிவு மேலாண்மையை ஊக்குவிக்க 4 வகை குப்பை தொட்டிகள் அறிமுகம்




தேனி, செப்.12

தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சி நிர்வாக பகுதியில் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்தும் வகையிலும், பொதுமக்கள் குப்பைகளை எளிதாக தரம் பிரித்து வழங்குவதற்கும் ஏதுவாக 4 வகையான வண்ண குப்பை தொட்டிகள் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. நகரின் தூய்மையை பேணி பாதுகாக்கவும், சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முன்னெடுக்கப்பட்ட இந்த நல்முயற்சிக்காக, சின்னமனூர் ராஜாபேக்கரிஉரிமையாளர்தனது சொந்த பொறுப்பில் இக்குப்பை தொட்டிகளை முழுமையாக வழங்கி சிறப்பித்துள்ளார். இந்த 4 வகை வண்ண குப்பை தொட்டிகள் மூலம் மக்கும் குப்பை, மக்காகுப்பை, ஆபத்தானகழிவுகள்மற்றும்மறுசுழற்சிக்குரிய கழிவுகள் என தனித்தனியாக பிரித்து சேகரிக்கும் பணிகள் தற்போது நகராட்சி பணியாளர்களால் மிகச் சிறப்பாக தொடங்கப்பட்டுள்ளன.

பொதுமக்களிடையே கழிவுகளை மூலத்திலேயே தரம் பிரிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் இத்தகைய சமூக பொறுப்புணர்வுமிக்க செயல், சின்னமனூர் நகராட்சி பகுதியின் சுகாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்வதுடன், ஏனைய வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயத்தை வனத்துறைஅமைச்சர்ஆர்.வி.இரஞ்சித்குமார்வனத்துறைஅலுவலர்களுடன் நேரில் சென்று ஏரி, பறவைகளின் வாழ்விடங்கள் மற்றும் முகத்துவாரப் பகுதியை பார்வையிட்டு ஆய்வு செய்து, நீர்நிலையின் சூழலியல் நலம் மற்றும் பல்லுயிர் வளத்தைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# திருவண்ணாமலையில் 24 மணி நேரம் தூங்காமல் தொழில்நுட்ப சவாலில் அசத்திய மாணவர்கள்

## எஸ்கேபி பொறியியல் கல்லூரியில் 'AWS FusionX' ஹேக்கத்தான் போட்டி

திருவண்ணாமலை, செப்.12

திருவண்ணாமலை எஸ்கேபி பொறியியல் கல்லூரியில் மாணவர்களின் தொழில்நுட்ப திறன், படைப்பாற்றல் மற்றும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் திறனை வெளிக்கொண்டு வரும் வகையில் நடைபெற்ற 'AWS FusionX' 24 மணி நேர ஹேக்கத்தான் போட்டி மாணவர்களின் உற்சாகமான பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது.

எஸ்கேபி பொறியியல்கல்லூரியின்கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை மற்றும் AWS மாணவர் அமைப்பாளர் குழு இணைந்து நடத்திய இப்போட்டி, கல்லூரி வளாகத்தில் உள்ள மென்பொருள் பூங்காவில் தொடர்ந்து 24 மணி நேரம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு எஸ்கேபி கல்விக் குழும நிறுவனங்களின் தலைவர் கு. கருணாநிதி தலைமை தாங்கினார்.

இணைச் செயலாளர் கே.வி. அரங்கசாமி, முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் ஆர். சக்தி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். பாஸ்கரன், கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறைத்தலைவர் முனைவர்என்.புருஷோத்தமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி பிஆர்ஓ சையத் ஜஹிருத்தீன் கலந்து கொண்டார்.






### 24 மணி நேரத்தில் உருவான புதுமைத் தீர்வுகள்

இப்போட்டியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவமாணவிகள் குழுக்களாக பங்கேற்று, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சமூகத்திற்கும் தொழில்துறைக்கும் பயனளிக்கும் வகையிலான புதுமையான தீர்வுகளை உருவாக்கினர்.

குறிப்பாக மேகக் கணிமை (Cloud Computing), செயற்கை நுண்ணறிவு (AI), மென்பொருள் வடிவமைப்பு உள்ளிட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட சவால்களுக்கு மாணவர்கள் தங்களது படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்ப அறிவின் மூலம் தீர்வுகளை உருவாக்கினர்.

தொடர்ந்து 24 மணி நேரம் நடைபெற்ற இந்த ஹேக்கத்தான், மாணவர்களின் சிந்தனைத்திறன், சிக்கல் தீர்க்கும் திறன், குழுப்பணி, நேரமேலாண்மை மற்றும் தொழில்நுட்ப அறிவை ஒரே நேரத்தில் சோதிக்கும் வகையில் அமைந்தது.

இரவு பகல் பாராமல் தொடர்ந்து பணியாற்றிய மாணவர்கள், தங்களது யோசனைகளை செயல்படும் தொழில்நுட்பத் தீர்வுகளாக மாற்றினர்.

இதன் மூலம் கல்லூரி மாணவர்களின் திறமைக்கு மட்டுமின்றி, எதிர்கால தொழில்நுட்பத் துறைக்குத் தேவையான திறன்களைவளர்த்துக் கொள்ளவும் இந்நிகழ்வு சிறந்த களமாக அமைந்தது.

போட்டியின் நிறைவில் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியைபேராசிரியர் எஸ். கல்பனா, மாணவர் அணித்தலைவர் எஸ்.பி. ஜெய் ஆகாஷ், நிகழ்வு ஒருங்கிணைப்பாளர் எல். சுந்தர் ராஜி, சமூக ஊடகப் பொறுப்பாளர் டி. விஷால் குமார், கள ஆதரவுப் பொறுப்பாளர் ஐ. ஜெசிதா ஜெனிபர், தொழில்நுட்பக் குழுப் பொறுப்பாளர் என். ஹரீஷ், கணினித் தொழில்நுட்ப ஆதரவுப் பொறுப்பாளர் ஜி. மனோஜ் குமார் மற்றும் குழு உறுப்பினர்கள் எஸ்.கிறிஸ்டினாஜான்சி ராணி, எஸ்.பி. திவ்யா, எஸ். கிஷோர் கண்ணா, ஒய்.ஆர். பாலசௌந்தர்யா, எம். தங்கதுரை உள்ளிட்டோர் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

நிகழ்ச்சியில் திரளான மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, நவீன தொழில்நுட்பங்கள் குறித்த தங்களது அறிவையும் திறன்களையும் மேம்படுத்திக் கொண்டனர். மாணவர்களின் தொழில்நுட்ப ஆர்வத்தையும் புதுமையான சிந்தனைகளையும் வெளிக்கொண்டு வந்த இந்த 24 மணி நேர ஹேக்கத்தான், கல்லூரியின் தொழில்நுட்பக் கல்வி செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது.

தேசபக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப., வாலாஜா வட்டம். புளியங்கண்ணு அரசு மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், இத்திட்டம் விரிவாக்கம் முன்னேற்பாடு பணிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

### ஆவடியில்

# டிஜிட்டல் அரஸ்ட் மோசடி வழக்கில் மேலும் ஒரு குற்றவாளி கைது

ஆவடி, செப்டம்பர் 12:

ஆவடி காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட ஓரகடம், அம்பத்தூர் பகுதியை சேர்ந்த ஆண்ட்ரூஸ் பொன்ராஜ் வைரமணி (வயது 65 என்பவரிடம் குற்றவாளிகள் தொலைபேசி மூலம் தொடர்புக்கொண்டு தாங்கள் தெலுங்கான CBI Commissioner பேசுவதாகவும், தங்களின் ஆதார் கார்டு பயன்படுத்தி சட்ட விரோத பண பரிவர்த்தனை நடந்திருப்பதாகவும், உங்களுடைய பணம் சட்டபடியான பரிவர்த்தணை உடையது என நிருபிக்க வேண்டுமானால் நாங்கள் கொடுக்கும் மூன்று வங்கி கணக்குகளில் தங்களிடம் இருக்கும் மொத்த பணத்தையும் உடனடியாக அனுப்பினால் அதனை சரிபார்த்து 6 முதல் 72 மணி நேரத்திற்குள் புகார்தாரரின் வங்கி கணக்கிற்கே திருப்பி அனுப்பி விடுவதாகவும், அவ்வாறு அனுப்பவில்லையெனில் புகார்தாரருடைய வங்கி கணக்குகளை முடக்கி டிஜிட்டல் அரஸ்ட் செய்ய கூடும் என மிரட்டி கடிதம் அனுப்பியதின் பேரில் புகார்தாரர் பயந்து குற்றவாளிகள் அனுப்பிய மூன்று வங்கி கணக்குகளுக்கும் மொத்தம் ரூ.25,60,000/ அனுப்பியதாகவும்,

ஆனால் பணத்தை பெற்றுக் கொண்ட மோசடி நபர்கள் அந்த தொகையினை புகார்தாரருக்கு திரும்ப கொடுக்கவில்லை எனவும் தான் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்த புகார்தாரர் தன்னை ஏமாற்றிய நபர்களின் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமாரிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில்இணையவழி குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் ஆவடி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளை பற்றிய புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டது.

அதன் அடிப்படையில் மேற்படி வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளில் ஒருவர் தெலுங்கானா மாநிலத்தில் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் சுபாஷினி பார்டி சகிதம் தெலுங்கானா மாநிலத்திற்கு சென்று தலைமறைவாக பதுங்கி இருந்த குற்றவா



ளியான வேமுலா சிவா சங்கர் (வயது 25) என்பவரை 09.09.2026 அன்று கைது செய்து விசாரணை செய்ததில் தனது வங்கி கணக்கை தனது பள்ளி நண்பர் நிட்டா மல்லேஷ் என்பவரிடம் கொடுத்ததாக கூறியதை அடுத்து தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்த நிட்டா மல்லேஷ் என்பவரிடம் மேற்கொண்டதில் மேற்படி குற்றவாளியானவர் இன்ஸ்டா மூலம் பழக்கமான நபர் ஒருவர் தான் விற்கும் ஒவ்வொரு வங்கி கணக்கிற்கும் கமிஷன் தருவதாக கூறிய தன் பேரில் தன்னுடைய வங்கி கணக்கு மற்றும் தன்னுடைய நண்பர்களின் வங்கி கணக்கு என மொத்தம் 7 வங்கி கணக்குகளை சட்டவிரோத செயலுக்காக விற்றுள்ளார்.

மேற்படி குற்றவாளி கமிஷனுக்காக வாங்கி விற்ற 7 வங்கி கணக்குகளும் Digital Arrest Scam செய்வதற்காக பயன்படுத்தப்படுள்ளது. மேலும் இதுவரை இந்திய முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மொத்தம் 25 சைபர் குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனஎனவிசாரணையில் தெரியவரவே குற்றவாளி தெலுங்கானா மஹபூப்நகரைச் சேர்ந்த நிட்டா மல்லேஷ் (வயது 25) என்பவரை ஆவடி காவல் ஆணையாளர் பிறப்பித்த உத்தரவின் பேரிலும், காவல் துணை ஆணையாளர் தலைமையிடம் அறிவுறுத்தலின்படியும், இணைய வழி குற்றப்பிரிவு கூடுதல் துணை ஆணையாளர் வழிகாட்டுதல்படியும், இணையவழி குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் சுபாஷினி பார்டி சகிதம் கைது செய்து பூந்தமல்லி நடுவர் நீதிமன்றம் அவர்களிடம் ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலில் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

எனவே வங்கி கணக்குகளைவைத்துமோசடி நபர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருவதால் பொதுமக்கள் தங்களுடை ஆதார் கார்டு, பான் கார்டு, போன் நம்பர், வங்கி கணக்கு மற்றும் அவற்றின் Access விவரங்கள் போன்றவற்றை கமிஷன் தொகைக்காக ஆசைப்பட்டு இது போன்ற செயல்களில் ஈடுபட்டு குற்றவாளியாக மாற வேண்டாம் என ஆவடி காவல் ஆணையாளர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

### விக்சித் பாரத் 2047 இலக்கை நோக்கி இளைஞர்களின் புதுமைச் சிந்தனைகள்:

# VBYLD 2027 நிகழ்வை சிறப்பாக நடத்த திருவண்ணாமலையில் மாவட்ட ஆலோசனைக் குழு கூட்டம்

திருவண்ணாமலை, செப்.12

இந்தியாவை 2047ம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக உருவாக்கும் இலக்கை நோக்கிய பயணத்தில்இளைஞர்களின் புதுமையான சிந்தனைகளையும் கொள்கைத் தீர்வுகளையும் பயன்படுத்தும் வகையில் நடைபெற உள்ள விக்சித் பாரத் (VBYLD) 2027 நிகழ்வை திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலககூட்டரங்கில்நடைபெற்ற இக்கூட்டத்தில், VBYLD 2027 நிகழ்வின் நோக்கங்கள், தகுதி, தேர்வு நடைமுறைகள், இளைஞர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் மற்றும் மாவட்ட அளவில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்ட து.

இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம், MY Bharat தளம் மூலம் முன்னெடுத்து வரும் VBYLD 2027 நிகழ்வு, நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் முக்கிய முயற்சியாக அமைந்துள்ளது.

15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் தங்களது புதுமையான சிந்தனைகள், சமூக மாற்றத்திற்கான தீர்வுகள் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கான கொள்கை யோசனைகளை முன்வைக்க இந்த நிகழ்வு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

VBYLD 2027 நிகழ்வில் விக்சித் பாரத் சவால், கலாச்சாரப் போட்டிகள், Design for Bharat, Hack for Social Cause, இளம் தொழில்முனைவோர் சவால் மற்றும் இளைஞர் நாடாளுமன்றம் என ஆறு முக்கியப் பிரிவுகள் இடம்பெறுகின்றன.

இளைஞர்களின் திறமை மற்றும் சிந்தனைகளை பல்வேறு கட்டங்களில் வெளிக்கொண்டு வரும் வகையில், டிஜிட்டல் வினாடி வினா, கட்டுரைஎழுதுதல்,மாவட்ட அளவிலான PPT விளக்கக்காட்சி, மாநில அளவிலான VBYLD போட்டி மற்றும் தேசிய இறுதிச்சுற்று என தேர்வு நடைமுறை நடைபெற உள்ளது.




மாவட்ட அளவில் தேர்வு செய்யப்படும் இளைஞர்கள் மாநில அளவில் 5 நிமிட Vision Presentation வழங்க உள்ளனர்.

மாநில அளவில் சிறப்பாக செயல்படும் இளைஞர்களிலிருந்து அதிகபட்சம் 15 அணிகள் தேர்வு செய்யப்படும். ஒவ்வொரு அணியிலும் 3 பேர் இடம்பெறும் நிலையில், சுமார் 45 இளைஞர்கள் தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாக தேசிய அளவில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவர்.

தேசிய இறுதிச்சுற்று 2027 ஜனவரி 10 முதல் 12ம் தேதி வரை புது டெல்லியில் நடைபெற உள்ளது.

மாவட்ட அளவில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிப்பது, தகுதியான இளைஞர்களை MY Bharat தளத்தில் பதிவு செய்ய ஊக்குவிப்பது, VBYLD 2027 நிகழ்வின் நோக்கங்களை அனைத்து தரப்பு இளைஞர்களிடமும் கொண்டு சேர்ப்பது மற்றும் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்புடன் நிகழ்வை வெற்றிகரமாக செயல்படுத்துவது குறித்து கூட்டத்தில் முக்கியமாக ஆலோசிக்கப்பட்டது.

MY Bharat தளத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை. புதிதாக பதிவு செய்ய விரும்பும் இளைஞர்கள் மொபைல் எண் அல்லது மின்னஞ்சல் மூலம் OTP சரிபார்ப்பு செய்து, தேவையான விவரங்களைப் பூர்த்தி செய்து பதிவு செய்யலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான அனைத்து இளைஞர்களும் VBYLD 2027 நிகழ்வில் பெருமளவில் பங்கேற்று, தங்களது புதுமையான சிந்தனைகள் மற்றும் வளர்ச்சிக்கான தீர்வுகளை முன்வைத்து, 'விக்சித் பாரத் @2047' என்ற இலக்கை நோக்கிய இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் என கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், விக்சித் பாரத் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA